# உத்தியாக்கள் சடங்குகள் தொடர்பான இனவரைவியல் ஆய்வு
# Ethnographical Study on Uthiyakal Ritual

கு.ரவிச்சந்திரன்[1]

***ஆய்வுச்சுருக்கம்***

*"உத்தியாக்கள் சடங்குகள் தொடர்பான இனவரைவியல் ஆய்வு" என்பது இவ்வாய்வின் தலைப்பாகும். இத் தலைப்பின் கீழ் வேட வழிவந்த வேடவேளாளர்களும் அவர்களது தெய்வங்களும், வழிபாட்டு முறைகளும் ஆராயப்படுவதோடு மிகச்சிறப்பாக உத்தியாக்கள் சடங்கும் அதன் வழிபாடும், அதன் சமூகப்பண்பாட்டு அழகியல் அம்சங்களும் ஆராயப்படுகின்றன. மட்டக்களப்பு பண்பாட்டோட்டத்தில், வாழ்ந்துக்கொண்டிருக்கும் பின்தங்கிய இனக்குழும மக்கள் பற்றிய ஆய்வுகள் மிகக் குறைவு. இத்தகையப் பிரிவினர் இன்று இனக்குழும மக்கள் பற்றிய கல்வியிலும் (Subalterns studies) இனவரைவியல் கல்வியிலும் (Ethnographical study) முக்கிய இடத்தைப் பெறுகின்றனர். இத்தகைய காரணங்களைக் கருத்திற் கொண்டு இதில் ஒரு பகுதியினராக இருக்கின்ற வேடர் வழிவந்த வேடவேளாளர்களும், அவர்களது சடங்கு நிலை வழிபாட்டு முறைகளுள் ஒன்றான உத்தியாக்கள் சடங்கும் அதன் சமூக பண்பாட்டு அழகியல் அம்சங்களும் இனவரைவியல் பின்னணிக்கூடாக வெளிக்கொணரப்பட்டுள்ளது. வேடவேளாளர் எனப்படுகின்ற இனக்குழு, சமூகத்தில் வேடுவர் என அழைக்கும் மரபும் உண்டு. குமார தெய்வமும் அதன் பல கிளைத் தெய்வங்களும், கன்னிமாரும், உத்தியாக்களும் இடம் பெறுகின்ற போதும் இவ்ஆய்வு "உத்தியாக்களின் சடங்கு மரபை" மாத்திரம் ஆராய்கிறது. மட்டக்களப்பு பண்பாட்டோட்டத்தில், வேடவேளார் மத்தியில் நிலவும் உத்தியாக்கள் சடங்கு வழிபாடு வேடப்பரம்பரையின் ஊடாக வந்தது. இவை பூர்வீக வணக்கமுறையின் பண்பைக் கொண்டவை. இறந்தவர்களை, கோயில் சடங்கில் வழிபாடு செய்வது மட்டக்களப்பு பண்பாட்டோட்டத்தில் முக்கியமான விடயமாகும். இதனை மட்டக்களப்பில் வேறு எந்தச் சடங்கிலும் காணமுடியாது.*

***திறவுச்சொற்கள்:*** *வேடவேளாளர், உத்தியாக்கள் வழிபாடு, செடிவாங்கிகள், குணமாக்கல், இனக்குழுமமக்கள், இனவரைவியல்.*

## அறிமுகம்:

"உத்தியாக்கள் சடங்கு தொடர்பான இனவரைவியல் ஆய்வு" என்பது இவ்வாய்வின் தலைப்பாகும். இத் தலைப்பின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழும் வேட வழிவந்த வேடவேளாளர்களும், அவர்களது தெய்வங்களும், வழிபாட்டு முறைகளும் ஆராயப்படுவதோடு மிகச்சிறப்பாக உத்தியாக்கள் வழிபாட்டின், சமூகப்பண்பாட்டு அழகியல் அம்சங்களும் சமூக முக்கியத்துவமும் ஆராயப்படுகின்றன.

இதுவரை காலமும் மட்டக்களப்பில் ஆதிக்கக் குடிகளாக இருக்கும் வெள்ளாளர்கள், முக்குவர்கள் அவர்களோடு தொடர்புபடும் தெய்வங்களான கண்ணகியம்மன், மாரியம்மன், திரௌபதிஅம்மன், பேச்சியம்மன் போன்ற கிராமியத் தெய்வங்களும்

[1] சிரேஸ்ட விரிவுரையாளர், நுண்கலைத்துறை,கலைகலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை, மின்னஞ்சல்: shapthikka@gmail.com

அவற்றிற்கான சடங்குகளும், பண்பாடுகளும் ஆய்வுப் பொருளாக இருந்து வந்துள்ளன. மிக பின்தங்கிய நிலையில் மட்டக்களப்பு பண்பாட்டோட்டத்தில், வாழ்ந்து கொண்டிருக்கும் வேடர், பள்ளர், குறவர், பறையர் பற்றிய ஆய்வுகள் மிகக் குறைவாகவே இருந்து வருகின்றன. இந்தவகையில் இனக்குழும மக்கள் பற்றிய கல்வியிலும் (SUBALTERN STUDIES), இனவரைவியல் கல்வியிலும் (Ethnographical study) முக்கிய இடத்தைப் பெறுகின்ற விளிம்பு நிலை மக்கள் குழுமத்தில் இருக்கின்ற வேடர் வழிவந்த வேடவேளாளர்கள் பற்றியும் அவர்களது வழிபாட்டு முறைகளுள் ஒன்றான உத்தியாக்கள் வழிபாட்டு முறைமை குறித்தும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது. இங்கு உத்தியாக்கள் வழிபாடு குணமாக்கல் செயற்பாட்டினூடாக ஒரு இணைந்த சமுகச் செயற்பாடாக அமைகின்றமை நோக்கப்படுகின்றது.

## ஆய்வு முறையியல்

ஒரு சமூகத்தின் பண்பாட்டில் இறந்த தனது மூதாதைகளான தனது உறவினர்களை (செடிவாங்கிகளை) இன்னுமொருவரின் உடம்புக்குள் வரபண்ணி அவர்கள் விரும்பி உண்ணும் உணவு குடிபானங்கள் மற்றும் அவியல்களை வழங்கி அவர்கள் மனதை ஆறுதல்படுத்தி, அவர்களுக்கு உளசிகிச்சை அளித்து, அவர்களை குணமாக்கிச் செல்லும் ஒரு சமூகத்தின் இணைந்த ஒருமைப்பாட்டு செயற்பாட்டை இச்சடங்கு (உத்தியாக்கள் வழிபாட்டு முறை) முன்னெடுக்கின்றது என்ற கருதுகோளை அடிப்படையாகக் கொண்டு, இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டது. இங்கு ஆய்வுக்கருப்பொருள் பகுப்பாய்வு விபரண முறையியலும், (Qualitative data analysis) வரலாற்று முறையியலும், பின்பற்றி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் கள ஆய்வு பிரதானமானது. மட்டக்களப்பு மாவட்டத்தில் வேடவேளாளர் அதிகம் வாழும், கற்குடா தேர்தல் தொகுதியில் முறுத்தானை, களுவன்கேணி, தளவாய் என்னும் கிராமங்களை மையமாகக் கொண்டு அங்கு திரட்டப்பட்ட களநிலைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ் ஆய்வில் முதல் நிலைத் தரவுகளாக, கள ஆய்வு மூலம் ஆய்வாளனால் திரட்டப்பட்ட தகவல்களும், இரண்டாம் நிலைத் தரவுகளாக இது தொடர்பாக வெளிவந்த இலக்கியங்களும் சஞ்சிகைகளும் கட்டுரைகளும் அமைகின்றன.

## விளிம்பு நிலை மக்கள் குழுமத்தில் வேடவேளாளர்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் காடுகளையும் கரையோரய பிரதேசங்களையும் அண்டி வாழ்ந்தவர்களாக வேடவேளாளர்கள் கருதப்படுகின்றனர். உத்தியாக்கள் வழிபாட்டுடன் தொடர்புபடும் வேடவேளாளர் பின்வரும் கிராமங்களில் வாழந்துவருகின்றனர். “மட்டக்களப்பு (முகத்துவாரம்), வேடர் குடியிருப்பு (குடியிருப்பு),தளவாய், களுவன்கேணி, சித்தாண்டி, கிரான், சந்திவெளி , வாழைச்சேனை (கல்குடாப் பகுதி), நாசிவன்தீவு, இரால்ஓடை, வாகரை, பெண்டுகன்சேனை, கோங்கனை, பால்சேனை,

திராய்மடு வாகனேரி, இலாவணை, முறுத்தானை, அக்குராணை, பனிச்சங்கேணி, கயான்கேணி, கட்டுமுறிவு, பழுகாமம், கொக்கட்டிச்சோலை (படுவான்கரைப் பகுதிகள்)"

இலங்கையில் பூர்வீகக்குடிகள் பலர் வாழ்வதாக வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். அதில் வேடரும் அடங்குவர். இருப்பினும், இவர்களின் வரலாறு பற்றிய ஆய்வுகள் பெரிதாக இடம்பெறவில்லை. சிங்கள மொழிகளில் சில ஆய்வுகள் தொகுப்பாக வெளிவந்துள்ளன. தமிழில் இது பற்றிய கவனம் அதிகம் செலுத்தப்படவில்லை. இருப்பினும் "திரு. க. தா. செல்வராஜா கோபால்" ஒரு நூலினை வேடர் பற்றி எழுதியுள்ளார். "கலாநிதி.யு.வி.தங்கராஜா" களுவன்கேணியை மையமாக வைத்து ஒரு ஆய்வினை செய்து கட்டுரையாக எழுதியுள்ளார். "பேராசிரியர் சி.மௌனகுரு" அவர்கள் ஈழத்து தமிழ் நாடக அரங்கில் மதகுருவே தெய்வமாக ஆடும் சமயச்சடங்கில் 'வேடரின்' வழிபாட்டுமுறை பற்றி குறிப்பிட்டுள்ளார். வேடர்களை விஜயன், குவேனியுடன் தொடர்புபடுத்தும் ஐதீகக் கதைளும் உண்டு. குவேனியின் பிள்ளைகளே வேடர்கள் என்று இக்கதைகள் கூறுகின்றன.

"பாராண்ட பரம்பரையினர் இன்று காடாண்டு கிடக்கின்றனர்." "வேடர்" என்ற காரணப் பெயர் பெற்று ஏனையோருக்கு ஏளனப் பொருளாக உருமாறி விட்டனர். (திரு.க.தா.செல்வராஜா கோபால் 1965 : iv) 'நாங்கள் விஜயனின் பிள்ளைகளின் பரம்பரையில் உருவானவர்கள்' என்று கூறிக் கொள்வதில் வேடுவர்கள் பெருமையடைகின்றனர். விந்தனைபற்றிலும், களுவன்கேணிப்பகுதியிலும் முறுத்தானை பகுதியிலும் வாகரை பகுதியிலும் இந்தக் கதையை நிரூபிக்கக்கூடிய போதிய சாட்சிகள் இன்னும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். (1965 : 3)

பொலன்னறுவை யுகத்தின் போது மகா பராக்கிரமபாகு மன்னன் தனது படைப்பிரிவில் வேடுவப்படையொன்றை வைத்திருந்ததாக மகாவம்சத்தில் குறிப்பிடப்படுகின்றது. இதிலிருந்த வேடுவர்கள் பராக்கிரமபாகுவின் இராச்சிய வீழ்ச்சிக்குப் பின்னர் மட்டக்களப்பை நோக்கி நகர்ந்திருக்கலாமென நம்பப்படுகின்றது.

ஆங்கிலத்தில் மட்டக்களப்பு வரலாற்றை வெளியிட்ட திரு. எஸ்.ஓ.கனகரெத்தினம் அவர்கள் மட்டக்களப்பில் வாழும் சாதிகள் சிலவற்றை வகுத்துக்காட்டினார். இச்சாதியினர்களை 17 சிறைகளென, குறிப்பிடும் இவர், அவற்றின் ஒரு பிரிவாகிய வேடுவரையும் குறிப்பிடுகின்றார். (திரு. எஸ்.ஓ.கனகரெத்தினம் 1921 : 36)

'நாடு காட்டு பரவணிக்கல்வெட்டு', செல்லாப்பத்து வேடர்கள் பற்றிய தகவல்களைத் தருகிறது. குறிப்பாக சீதாவாக்கை நகருக்குப் போய், நிலமை - ஈறலையும் , அவரது மனைவியும், சனங்களுமாக நகருக்குச் திரும்பிக் கொண்டிருக்கும் போது செல்லாப்பத்து வழிப்பாதையில் ஒரு வேடுவிச்சி ஒரு பெண்பிள்ளையை பிரசவித்து அவ்விடத்திலே விட்டு விட்டுப் போக அதை எடுத்து வளர்த்து மூத்துவனுக்கு திருமணம் செய்து கொடுத்ததாகவும், அவள் பதினாறு பெண்பிள்ளைகளை

பெற்றதாகவும், அந்த சந்ததிகளுக்கூடாக வந்தவர்களே வேட வெள்ளாளர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (திரு.எப். எக்ஸ். சி. நடராஜா, 1980 :11)

கோறளையன் பற்று என்பது வேடத் தலைவன் கோறளையன் தனது சமூகத்தோடு ஆட்சி செய்து வந்த இடம் என்பதனால் கோரளையன் பற்று என்பது கோரளைபற்று என மருவிற்று. (சுந்தரமூர்தி.க., வயது-73)

கள ஆய்வின் போது வேட வேளாளர்களாக இனங்காட்டப்பட்டவர்கள் தங்களின் சந்ததியினர் வேடர்கள் என்றும், வேடர்கள் என்பது தாழ்த்தப்பட்ட சாதியென கருதப்பட்ட போது, மட்டக்களப்பில் வெள்ளாளர் எனப்படும் சாதியினர் உயர்வானவர்களாக, கணிக்கப்பட்டிருப்பதை அவதானித்து 'நாங்களும் ஒரு உயர்ந்த அந்தஸ்த்தில் நோக்கப்பட வேண்டும் என்பதற்காக வேட வெள்ளாளர் என அழைக்கும் மரபை ஏற்படுத்தினோம்' எனக் குறிப்பிட்டார். (தகவல் தளவாய் திரு.காத்தமுத்து, வே.நாகன்).

'களுவன்' என்னும் ஒரு வேட பரம்பரை களுவன்கேணிப் பகுதியில் வாழ்ந்ததால் அப்பெயர் வந்ததாகவும் களுவன்கேணியை மையப்படுத்தியே ஏனைய அயல் கிராமங்களுக்கு இவர்கள் ஊடுருவி குமார தெய்வத்தை வழிபட்டு வேடவேளாளர்களாக வாழ்கின்றார்கள் என களுவன்கேணியை சேர்ந்த மாரியர் என்பவர் கூறினார். (தகவல் க. மாரியர்).

சிங்கள மக்கள் வாழ்ந்த பகுதியில் இருந்த வேடர்கள் சிங்களமொழியையும், தமிழ் மக்கள் வாழ்ந்த பகுதியில் இருந்த வேடர்கள் தமிழ் மொழியையும், பிற்பட்ட காலங்களில் கற்றுக் கொண்டு அவர்கள் சிங்களவர்களாகவும், தமிழர்களாகவும் மாறியிருப்பது கள ஆய்வின் போது அவதானிக்க தக்கதாக இருந்தது. வேடர்களுக்குரிய தனித்துவமான அவர்களின் சமூக இயல்புகளுக்கேற்ப பழக்கவழக்கங்கள், சடங்குகள், நடைமுறைகள் இன்று வரை பேணப்படுகின்றன. எனினும் தமிழ் சிங்கள மொழி பேசும் வேடர்களுக்கிடையே, பல ஒற்றுமையான பழக்கவழக்கங்கள் நிலவுவதை அவதானிக்க முடிகிறது. இவற்றையெல்லாம் அவதானிக்கின்ற போது வேடர்கள், மட்டக்களப்பில் ஆதிக்குடியினராக இருந்திருக்க வேண்டும் என்பதும், வேட வெள்ளாளர்களாக, இன்றைய சாதி அமைப்புக்குள் உள்வாங்கப்பட்டிருக்க வேண்டும் என்பதும் புலனாகின்றது.

**வேடவேளாளர் பண்பாட்டில் நிலவும் தெய்வங்களும் அதன் சடங்குகளும்**

வேடவேளாளர்களிடையே இனங்காணப்பட்ட தெய்வங்களையும் அவற்றின் இயல்புகளையும் சுருக்கமாக நோக்கினால் தான், உத்தியாக்கள் வழிபாட்டை விளங்கிக் கொள்ள முடியும். வேடர்களிடையே பல தெய்வங்கள் இருப்பதனை காணலாம். இதனை 'வேடக்கலை தெய்வங்கள்' அல்லது 'காட்டுத்தெய்வங்கள்' என

அழைக்கும் மரபே காணப்படுகின்றது. தெய்வங்களை ‘கலை’ என அழைக்கும் மரபும் இவர்களிடம் நிலவுகிறது.

இத்தெய்வங்கள் அனைத்தும் ஆண் தெய்வங்களாகவும், பெண்தெய்வங்களாகவும் இருக்கின்றன. கள ஆய்வின் போது பின்வரும் தெய்வங்கள் இனங்காட்டப்பட்டன. அவற்றை விளக்குவதன் வாயிலாக ‘வேடகலைதெய்வங்கள்’ பற்றி அறிந்து கொள்ளமுடியும். வேடக்கலைத் தெய்வங்களின் மூத்த தெய்வங்களும் அதன் கீழ் வரும் தெய்வங்களும் கள ஆய்வில் அவதானிக்கப்பட்டன.

**குமாரகலை தெய்வம்**

இதுவே இவர்களது தலைத்தெய்வம் (பிரதான தெய்வம்) ஆகும். குமாரகலைகள் ஆதிக்குமாரர், கொம்புக்குமாரர், அழகுக்குமாரர், கொழும்புக்குமாரர், கண்டிக்குமாரர், புள்ளிக்குமாரர், காலிக்குமாரர் என பிரிந்து வருவதாக குறிப்பிடுகின்றனர். கண்டி, காலி, கொழும்புக்குமாரர்கள் அவ்விடங்களில் இருந்து இவர்களிடம் வருவதாகவும் நம்புகின்றனர். குமாரர் காட்டைக் காப்பவனாகவும் வேட்டைக்கு உதவுபவனாகவும் கருதுகின்றனர். குமார தெய்வ சடங்கு பற்றிய விரிவான தகவல்கள் நீண்ட ஆய்விற்குரியவையாகும்.

**கடல் பகுதிக் கலைகள் (தெய்வங்கள்)**

மாணீலி, குடாணீலி, அயோத்தியா, குருவிலி, மறமுந்த, ஒந்தமுலைக்காரி, ஒட்டிப்பாட்டு, ஒரப்பட்டு, நளப்பட்டு, குறப்பட்டு, சிறியாப்பட்டு, வில்லம்புப்பட்டு, மூடப்பட்டு, துள்ளாட்டுகாரி, அங்கால தென்னாந்து, நங்கிலாதென்னாந்து, ஆமாலகாரி, இந்திமாலுநாச்சி, முதுமறுநாச்சி, திக்குறுப்புமனு, எரிக்கலேயம்பூமனு, உடந்தாவளமனு, (திராய்) கன்னத்தாவள், அந்தும்குமாரி, (அந்தும் குமாரியை குமாரரின் தாயாகக் கருதுகின்றனர்.)

வேட வேளாளர்களின் கடற்தொழிலோடு தொடர்புபடுத்தும் வகையில் கடல் ஆபத்துக்களில் இருந்து தங்களை இத்தெய்வங்கள் காப்பாற்றும் என்றும், இவை கடற்பகுதிகளில் நடமாடும் என்றும் மீன்கள் இருக்குமிடத்தை தங்களுக்கு தெரிவிக்கும் என்றும் நம்புகின்றனர். அகோரமான தெய்வங்களாக கருதும் இவைகள் கொடிய நோய்களோடு தொடர்புபடுவதனால் இத்தெய்வங்களை வழிபடுவதன் மூலம் நோய்களில் இருந்து தப்பமுடியும் என்ற நம்பிக்கையின் விளைவாக இத்தெய்வங்களை போற்றுகின்றனர்.

இத்தெய்வங்கள் ஒரு சந்ததியின் பரம்பரைகள் என்றும் இதில் அந்தும்குமாரியும் மாணீலியுமே கடல் பகுதி தெய்வத்துக்குள் மூத்த தெய்வங்கள் என்றும் இதிலிருந்து பிரிந்தவைகளே மேற்கூறியவைகள் என்றும் குறிப்பிடுகின்றனர். இத்தெய்வங்கள் கடற்பகுதி தெய்வங்களாக நோக்கப்படுவதற்கு காரணம் சடங்கு நேரத்தில் இத்தெய்வங்கள் வில், அம்பு எடுத்து கடற் பகுதியால் விளையாடி வரும் என்ற

நம்பிக்கையே ஆகும். மணல்காட்டு வேடர்களே ( கரையோரத்தில் வாழ்ந்தவர்கள்) இத்தகைய தெய்வங்களை கூடுதலாக அழைத்து ஆதரித்து வழிபட்டு வந்திருக்கின்றனர்.

இது கப்பலில் வரும் என்ற நம்பிக்கையினால் இதனை 'கப்பல் தெய்வம்' என்றும் அழைக்கும் போக்கு இவர்கள் மத்தியில் நிலவுகின்றது. இவை பறவைகளின் வடிவில் வருவதாக சிலர் குறிப்பிடுகின்றனர். இத் தெய்வங்கள் வரும் வழியில் சிறு பிள்ளைகள் குறுக்கிட்டால் அப்பிள்ளைக்கு கொடிய நோய்களை கொடுத்துவிட்டுச் செல்லும் என்றும், இத் தெய்வங்கள் ஏற்படுத்திய நோய்களை குமாரர்தான், தீர்க்க வேண்டும் என்றும் குறிப்பிடுகின்றனர். இவற்றையெல்லாம் ஒருங்கிணைத்துப் பார்க்கும் போது நோய்க்கும் துன்பத்திற்கும் பயந்து இவற்றை தெய்வமாக போற்றுகின்றார்கள் என்பது தெரிய வருகிறது.

கடல் தொழிலோடு தொடர்புபடும் தெய்வங்கள் இவர்களின் வழிபாட்டில் செல்வாக்கு பெற்றிருப்பதால் ஆரம்ப காலங்களில் கடலை அண்டி வாழ்ந்த வேடவேளாளர் கடல் தொழிலாளர்களாக இருந்திருக்க கூடும் என ஊகிக்க முடியும்.

**மாறா தெய்வங்கள்**

மாறா தெய்வங்கள் இவர்கள் மத்தியில் பின்வரும் கலைகளாக இனங்காணப்படுகின்றன. இவை தோறண மாறா, தேன் பூச்சி மாறா, புளியம் புள்ளி மாறா, கித்துள் மாறா, கித்துள் பெனி மாறா, எளிந்திரு மாறா, பனிக்க மாறா, வதன மாறா என்கின்ற தெய்வங்கள் மாறா தெய்வங்களாக கருதப்படுவன. இவை இவர்களின் தொழில் முயற்சியோடு தொடர்புடைய தெய்வங்களாகும். தேனெடுத்தல், ஆனைகட்டுதல், மாடு பிடித்தல், என்பனவற்றுக்கும் இந்த மாறா தெய்வங்கள் உதவியாய் இருந்துள்ளன. இத்தெய்வங்கள் இவர்களுக்கு எந்த தீமையையும் செய்யாத தெய்வங்கள் என்றும் இத்தெய்வங்கள் இவர்களுக்கு நன்மையான காரியங்களைச் செய்கின்ற தெய்வங்கள் என்றும் கருதுகின்றனர்.

**தெவுத்தன் தெய்வம்**

தெவுத்தன் தெய்வங்களின் வருகை புள்ளிக்காரன் என்ற தெய்வத்தோடு தொடர்புபடுகின்றது. புள்ளிக்காரன் தெவுத்தன் கலையின் முதலாவது தெய்வம். இது பின்வரும் கலையாக வரும். (பானங்காவல தெவுத்தன், குருமுகுந்த தெவுத்தன், குருநாகல தெவுத்தன், பொல்லுக்காரன், மாத்தள தெவுத்தன்) அத்தகைய தெய்வத்தின் இயல்பு நோய் குணப்படுத்தலாகும். இது பக்தர்களுக்கு ஏற்படுத்தும் நோய்களை இனங்கண்டு, நோய் உள்ளவர்கள் எனக் கருதப்படுபவர்களை அழைத்து தனது கையில் இருக்கும் வேல், பொல்லு, தென்னம்பாளை என்பனவற்றால் அமர்த்தி முகத்துக்கு தண்ணீர் அடித்து நோய் தீரும் என்று சொல்லி நூல் கட்டிவிடும். இத்தெய்வங்களால் நோய் குணமடைந்தோர் எனக் கருதப்படுவர்கள் நேர்த்தியாகக்

கொடுக்கும் பொருட்கள் வாங்கி அவ்விடத்திலே பாவனைப்படுத்தி ஆடிச்செல்வதும் பார்ப்பதற்கு சுவாரசியமாகவும் இருக்கும். இதனை ஒரு குணமாக்கல் நடைமுறை என்று கருதலாம்.

**நாச்சிமார் கன்னிமார்**

நாச்சிமார், கன்னிமார் எனப்படுபவர்கள் பெண்களுக்கு ஏற்படும் நோய்களோடு தொடர்புடையவர்கள். பெண்களின் கருவளத்தோடு சம்மந்தமான நோய்கள் என்பனவற்றில் கூடியளவு தொடர்புபடும் தெய்வங்களே இவைகளாகும். இவை பின்வரும் கிளைகளாக இனங்காணப்பட்டன. செண்பக நாச்சி, இந்திமல் நாச்சி, தெய் நாச்சி, முத்துமல் நாச்சி, நாமல் நாச்சி, போமல் நாச்சி, எனவும் கன்னியராக செம்புக்கன்னி, செந்தாமரைக்கன்னி, வில்லுக்கன்னி, விசாரக்கன்னி, கடற்கன்னி, குளக்கன்னி, அக்கினிக்கன்னி, சக்கரக்கன்னி, குங்குமக்கன்னி, காயங்கன்னி, மொக்காட்டுகன்னி, எனப் பிரிவுபட்டு வருவன. இவற்றின் நோக்கம் குறிபார்த்து பிரச்சினைகளைச் சொல்லுதல். இந்த தெய்வத்தினை கப்புகர் வில்லில் அழைத்துப் பக்கதர்களுக்கு உள்ள பிரச்சினையை கேட்டால் அந்த பிரச்சினை தொடர்பான விளக்கத்தை இந்த நாச்சிமாரும், கன்னிமாரும் கப்புகருக்கு சொல்லுவார். இப்பிரச்சினை எந்த தெய்வத்தால் வந்தது, இப்பிரச்சினையை தீர்க்க எந்த தெய்வத்தை நாடவேண்டும் என்பதை இந்த நாச்சிமார், கன்னிமாருமே சொல்லுவார் என்று நம்புகின்றனர்.

**மொட்டாக்கு தெய்வம்**

இவை மிகவும் பயங்கரமான தெய்வங்களாகும். ஆட்களின் உயிரைக்கூடக் கொல்லும் வல்லமை இத்தெயவங்களின் பார்வைக்கு இருப்பதாக நம்புகின்றனர். பல அதிர்ச்சி மிகுந்த நடவடிக்கையை இந்தத் தெய்வங்கள் செய்யும். “கொதிக்கும் எண்ணெய்க்குள் கையைவிட்டு பலகாரத்தை வடித்தல்” என்ற நிகழ்வு குறிப்பிடத்தக்கது. இத்தெய்வங்கள் இன்று வேடர்கள் மத்தியில் வீடுகளில் வைத்து வழிபாடு செய்யப்படுவதை அவதானிக்கலாம். இத்தெய்வங்கள் இருக்கும் வீட்டில் எந்த தீய சக்தியும் அணுக முடியாது. தீய சக்திகளின் செயல்கள் இத்தெய்வத்தினால் அழிக்கப்படும். இத்தெய்வத்தை எதிர்ப்பவர் கொடூரமான நோய்க்கு ஆளாகி இறக்கக்கூட நேரிடலாம் என்று குறிப்பிடுகின்றனர். இந்த தெய்வங்கள் கல்லத்தாவிலி கிரியம்மா, கொல்லத்தாவிலி கிரியம்மா, தெல்கிரியம்மா, அடலங்கா, மாகப்புறா, குடாகப்புறா, மறமுந்தா என்பனவாகும்.

**பெரியசாமி**

வேடர்கள் வைரவரை பெரிய சாமி எனக் கருதுகின்றனர். இவர் குமாரனின் பணியாளராக கருதப்படுகின்றார். வயல்களையும், குடிமனைகளையும், சுடலை, பட்டியடிகளையும், (மந்தை வளர்ப்பிடம்) சேனைகள் என்பனவற்றைக் காவல் செய்பவராக அவரைக் கருதுகின்றனர். இவர் சுடலைவைரவர், கெங்கவைரவர்,

சுடலைகாளி, கெங்காளி, நரசிங்கவைரவர், ஆதிவைரவர் என பலவாறு உருமாறி வருவதாகவும் குறிப்பிடுகின்றனர்.

**மட்டக்களப்பு சிறு தெய்வ வணக்க முறைக்குள், வேடவேளாளர்களின் பண்பாட்டு வகிபாகம்**

மட்டக்களப்பு வாழ் தமிழர்களிடையே நிலவுகின்ற தெய்வங்களையும், வழிபாட்டு முறைகளையும் நோக்குகின்ற போது இரண்டு வகையான பிரிவுகள் அவதானிக்கப்படுகின்றன. இந்தப் பிரிவுகளை பெருந்தெய்வ வழிபாடு, சிறு தெய்வ வழிபாடு எனப் பிரிப்பர். பெரு தெய்வ வழிபாடு என்பது மட்டக்களப்பு நகரை அண்டிய பகுதிகளில் ஆகமமுறை தழுவிய வணக்க முறைகளுக்குள் வரும் தெய்வங்களைக் குறிக்கும். சிறு தெய்வ வழிபாடு மட்டக்களப்பின் கிராமப் புறங்களையும், காடுகளையும் அண்டிய பகுதியில் நிலவும் மந்திரத்தோடும், வேண்டுதல் வழிபாட்டோடும் பத்ததியோடும் தொடர்புடைய தெய்வங்களைக் குறிக்கும்.

மட்டக்களப்பில் மிகப் பெரும்பாலான வணக்கமுறையாக சிறுதெய்வங்களுக்குச் செய்யும் வணக்க முறையே இருக்கின்றது. வேறு எந்த மாவட்டத்திலும் இல்லாத அளவு சிறுதெய்வச் செல்வாக்கை இங்கு காணலாம்.

இன்றைய மட்டக்களப்புச் சூழலில் சிறுதெய்வ வணக்கமுறையாக இருக்கின்ற மந்திரங்களோடும், பூசாரியோடும், காவியங்களோடும் பத்ததியோடும் தொடர்புபட்டுள்ள மாரியம்மன், காளியம்மன், கண்ணகியம்மன், வைரவர், வீரபத்திரர் போன்ற பல தெய்வங்களும், அதன் வழிபாடும் இன்று ஆகமமுறைசார்ந்த குருக்கள்மாரிடம் சென்றிருப்பதும் ஆகம முறைக்குள் உட்பட்டிருப்பதும், ஆலயங்கள் பல இன்று சமஸ்கிருதமயமாகியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இத்தகைய செயற்பாடுகள் ஒரு சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகளில் மாற்றத்தை ஏற்படுத்தும்.

கொத்துக்குளத்து மாரியம்மன் கோயில், ஏறாவூர் வீரபத்திரர் கோயில், போரதீவு காளிகோயில், காரைதீவு கண்ணகியம்மன் கோயில், மகிழடித்தீவு கண்ணகியம்மன் கோயில், கோட்டமுனை மாரியம்மன் கோயில், கொக்குவில் குமாரத்தன்கோயில் மட்டக்களப்பு திரௌபதி அம்மன் கோயில் போன்றவை இன்னும் பல மரபுவழி வழிபாட்டு முறையை கைவிட்டு ஆகமமுறையான பூசை முறைகளைக் கடைப்பிடித்து, பூசாரியிடமிருந்து, குருக்கள்மார்களிடம் சென்று, மட்டக்களப்பின் பழமை, மரபு, தனித்துவம் என்ற போக்கை சிதைப்பதாக இருக்கின்றன. இருப்பினும், இன்றைய மட்டக்களப்பின் சமூக அமைப்பில் பழமை, மரபு, தனித்துவம் என்பன பேணப்படும் வழிபாட்டுமுறைகளாகவும் தெய்வங்களாகவும் இருப்பவை வேடர்கள் மத்தியில் நிலவும் தெய்வங்களும் வழிபாட்டு முறைகளுமே ஆகும்.

மட்டக்களப்பு என்று சொன்னதும் மந்திரவித்தான்மை எவர் மனதிலும் முதல் தோன்றும். (1996 : 110) இச்சிறு தெய்வங்களை மந்திரத்தில் உச்சரித்து கட்டுதல், வெட்டுதல் போன்ற பல நடைமுறைகளையும், சூனியம் செய்தல், வளவைக்

காவல்பண்ணல், களிப்புக்கு செய்தல் போன்றவற்றின் மூலமாக மந்திரமே இருக்கின்றன. ஆனால், இச் சிறுதெய்வங்களின் வரிசையில் இனங்காணப்பட்ட வேடர்களின் தெய்வங்களும், அதன் வணக்க முறைகளும் வித்தியாசமானவை. இங்கு மந்திரம் ஓதி கட்டுதல், வெட்டுதல், சூனியம் செய்தல் என்கின்ற விடயங்கள் இவர்கள் மத்தியில் இல்லை. இவர்கள் தெய்வத்தை மன்றாடி, கூப்பிட்டு தமது உடம்பில் வரவழைத்து தெய்வமாக உருமாறி ஆடிக்கொண்டு தெய்வவாக்கு சொல்லுதல் முறைமையே தமது வழிபாட்டு முறையாகக் கருதுகின்றனர். இதனை வேண்டுதல் வழிபாடு எனவும் அழைக்கின்றனர்.

இத்தகைய சிறு தெய்வ வழிபாட்டு முறைக்குள் அடங்கியுள்ள வேடர்களின், வழிபாட்டு முறைகளும் மட்டக்களப்பின் பாரம்பரிய வழிபாட்டு முறைகளுள் முக்கியமாக பேணப்பட வேண்டிய ஒன்றாகும். மட்டக்களப்பின் வரலாற்றில் மிகவும் பழமையான வழிபாட்டு முறையைக் காட்டும் நிகழ்வுகள் வேடர்களின் மத்தியில் காணப்படும் தெய்வங்களிலும் வழிபாட்டு முறையிலும் இருக்கின்றன.

இத்தகைய செல்வாக்குடைய வேடர்களும் அவர்களது தெய்வங்களும், வழிபாட்டு முறைமைகளும் அவர்களது தொழில் முறைமையோடும், அவர்களது சமூக நடைமுறையோடும் தொடர்புபடுகின்றன. தொழில் ரீதியாக அவதானிக்கும் போது வேட்டையாடுதலும், அதன் பண்புகளுக்கும் ஏற்ப குமார கலைகளை(கடவுளர்கள்) வேடருக்குரிய தெய்வமாக அழைப்பர். இதனை காட்டுத் தெய்வம் என்று அழைக்கும் போக்கு இவர்களிடம் உண்டு.

தேனெடுத்தல் என்பது இவர்களது பிரதான தொழிலாகும். இதற்காக இவர்கள் மாறா தெய்வங்களை குறிப்பாக பூச்சி மாறாவை அழைப்பதும், மந்தை வளர்ப்பை பிரதானப்படுத்தி வதனாமாறா தெய்வத்தை அழைப்பதும் இடம்பெறுகின்றன. இவ்வாறே, கரடித்தெய்வமும், பணிக்கமாறா எனும் தெய்வமும் ஆணைகட்டுதலோடும் தொடர்புபடுகின்றன. இவை அனைத்தையும் அவர்கள் வழிபடுவதனால் தொழில் நன்கு நடைபெறும் என்றும் தொழிலுக்கு போகும் போது எந்த இடையூறும் வராது என்றும் இவர்கள் நம்புகின்றனர்.

இதே போன்று சமூக ரீதியாக நோயின்றி வாழுதல், வீட்டில் அமைதி நிலவுதல், பாதுகாப்போடு இருத்தல், எதிர்பார்ப்புக்களை வெல்லுதல் என்பன இத்தெய்வங்களின் கருணையினால் நிகழ்வன என்ற நம்பிக்கையும் இவர்களிடம் இருக்கின்றன. இத்தகைய சமூகம் நோக்கிய தேவையோடு வேடர்கள் தங்களது தெய்வங்களை போற்றியும், ஆதரித்தும், அதற்கு சடங்கு நடத்துவதும் இன்று வரை பரம்பரை பரம்பரையாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நவீனத்துவத்தின் வருகையும் அதன் தாக்கங்களும் அதன் விளைவுகளும் இத்தகைய வழிபாட்டு மரபிலும், பண்பாட்டிலும் எத்தகைய தாக்கங்களை செய்ய முயற்சித்தாலும்

இச் சமூகத்தவர்கள் தங்களது பண்பாட்டினை மரபு மாறாமல் மிக அவதானத்தோடு பேணுகின்றனர்.

**வேடவேளாளர்களின் சமூக பண்பாடும் வாழ்வியலும்**

இவர்கள் வேட வழிவந்த சந்ததியினர் என்று குறிப்பிட்டாலும் தற்போதைய நிலையில் பல சாதியினரின் கலப்பு இவர்களுக்குள் நிலவுவதை அவதானிக்கலாம். இவர்களின் சமூகப் பொருளாதார நிலைமைகளைப் பற்றிப் பார்க்கின்றபோது இவர்கள் சமூக ரீதியில் மட்டக்களப்பின் பிரதான சாதியினராக இருக்கும் முக்குவர், வெள்ளாளர், கரையார் போன்ற சாதியினரின் அந்தஸ்துக்களிலிருந்து தாழ்ந்தவர்களாக இருக்கின்றார்கள்.

பொருளாதாரத்தை பெற்றுக் கொள்ளும் வழிமுறைகளாக வேட்டையாடல், தேன்எடுத்தல், சேனைப்பயிர்செய்கை, மீன்பிடி, போன்ற தொழில் முயற்சிகள் இருப்பினும் அவர்களது பிரதான தொழில் முயற்சியான வேட்டையாடல் இலங்கை அரசால் தடை செய்யப்பட்டுள்ளது என்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்க முக்கிய விடயமாகும்.

அவர்கள் பண்பாட்டு ரீதியில் சில தனித்துவமான பண்பாட்டினை வைத்திருந்தாலும், சமூகங்களுக்கிடையிலான பண்பாட்டு ஊடாட்டம் காரணமாக ஏனைய சாதியினரின் பண்பாட்டிலிருந்து பெரிய மாறுபாட்டை இவர்களிடம் காணமுடியவில்லை. இருப்பினும், முறுத்தானை, கோங்கானை போன்ற காடுகளை அண்டிய பகுதிகளில் வாழ்கின்றவர்களிடையே பழைய வேடுவர்களுடைய பண்புகள் சில காணப்படுகின்றன. உதாரணமாக, அவர்களது உடையமைப்பு, அவர்களின் வீட்டின் அமைப்பு, அவர்களுடைய முகபாவனைகள், அவர்களுடைய பேச்சு, அவர்களுடைய நடவடிக்கைகள் பழைய வேடுவர்கள் பற்றிய எண்ணக்கருவை நிரூபிப்பதாக இருக்கின்றன.

இவர்களிடையே நிலவும் உறவு முறைகள் இன்று மட்டக்களப்பில் வழக்கத்தினுள்ள உறவு முறைகளை ஒத்ததாகவே இருக்கின்றன. திருமண முறையிலும் மச்சான், மச்சாளை திருமணம் செய்தல் என்ற பண்புகள் காணப்பட்டாலும் வேறு சாதிக்கலப்புகளும் தவிர்க்க முடியாததாகவே இருக்கின்றன. பெண்பிள்ளை பூப்பெய்தல் சடங்கு, இறந்தவர்களுக்கு செய்யும் சடங்கு இவர்களிடம் காணப்படுகின்றன. இதனை (இறந்தவர்களுக்கு செய்யும் சடங்கு) ஈமச் சடங்கு எனவும் அழைப்பார்கள். இவர்களின் சமூக அமைப்பினை அவதானிக்கின்ற போது இவர்களிடம் குடி முறைகள் இல்லை. இவர்களின் சமூக அமைப்பானது 'பரம்பரை' என்ற சொல்லாடலை கொண்டு வாழும் வேடரை அடையாளப்படுத்த அச் சமூகத்தின் மத்தியில் பயன்பாட்டில் உள்ளது. இதனை இன்றும் தளவாய், களுவன்கேணிப் பகுதிகளில் இனங்காணலாம்.

“களுவன்கேணியில் தந்தை வழி வந்த சந்ததியினர் தங்களது சந்ததியின் முதலாவது வாரிசின் பெயரைக் கொண்டு அந்த சந்ததியினரை அழைக்கும் மரபு” காணப்படுகிறது என்பது கள ஆய்வின்போது தெரியவந்தது. களுவன்கேணியில் தந்தை வழி பரம்பரைகளாக 07 பரம்பரைகள் இனங்காணப்பட்டன. அவை, களுவப்பர் பரம்பரை, உக்குனுமார் பரம்பரை, கினுச்சர் பரம்பரை, பணிக்கர் பரம்பரை, கல்கொட்டவர் பரம்பரை, தேவக்குட்டியர் பரம்பரை, மாரியார் பரம்பரை என்பனவாகும்.

தளவாய்ப் பகுதியிலும், மேற்கூறிய தந்தை வழிப் பரம்பரையினரே செல்வாக்குச் செலுத்துபவர்களாக இருக்கின்றனர்.

முறுத்தானைப் பகுதியில் வேடர்கள் தங்களுக்குள் ஏழு வேட பரம்பரைகள் இருப்பதாக குறிப்பிடுகின்றனர். இதில் ஐந்து பரம்பரைகளைத்தான் தெரியும் என்றும் இரண்டு பரம்பரைகள் பிற்பட்ட காலங்களில் அழிந்து போனதாகவும் கூறுகின்றார்கள். இப்பரம்பரையும் தந்தை வழி மரபையே காட்டுகின்றது. அப்பரம்பரைகளாவன, பணவள வேடர், பட்டியடி வேடர், செல்லாப்பத்து வேடர், திருக்காக்கனி வேடர், கட்ட நூறு வேடர் என்பனவாகும். (தகவல் முறுத்தானை திரு.த.வீமன், வண்டையா (கப்புகனார்கள்)

எனவே, வேட வெள்ளாளர்களின் சமூக அமைப்பில் தந்தை வழி சமூக அமைப்பே பிரதான இடத்தைப் பெறுகின்றது. இவர்களது பொருளாதார நிலைமைகளை நோக்கும் போது இவர்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்றவர்களாகவே இருக்கின்றனர். இவர்களது பிரதான தொழில் (தற்பொழுது) விவசாயம், மற்றும் மீன்பிடியாக இருந்துவருகின்றது. விவசாயம் என்னும் போது, நெல் உற்பத்தி கவனத்தில் கொள்ளப்படுகின்றது. நெல்லுற்பத்தி என்னும் பொழுது சொந்த வயல்கள் குறைவானதாகவே இவர்களிடம் இருக்கின்றது. கூடுதலானவர்கள் போடிமாரின் வேளாண்மைக்கு காவல்காரர்களாகவே இருக்கின்றனர். மற்றும் களுவன்கேணி, தளவாய் பகுதிகளில் மீன்பிடித் தொழிலை அதிகமானவர்கள் செய்கின்றனர். முறுத்தானைப் பகுதியில் உள்ளவர்கள் பொந்துத்தேன் எடுக்கின்ற தொழிலைச் செய்து வருகின்றார்கள். விறகு வெட்டுதல், மீன் பிடித்தல், குடிசை கைத்தொழில் போன்றவைகளும் இவர்களின் தொழில் முயற்சிகளாக இருக்கின்றன.

இவர்களது சமூகப் பொருளாதார அபிவிருத்தியில் வெளிநாட்டு நிறுவனங்கள் ஓரளவுக்கு கவனம் செலுத்தி வருகின்றன. அவையாவன – சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம், ஒக்ஸ்பாம், நோறாட், கேயார், ஐக்கிய நாடுகளின் உலக உணவுத்திட்டம், இடம்பெயர்வுக்கான சர்வதேச நிறுவனம் (IOM) போன்ற நிறுவனங்கள் மருத்துவ வசதி, குடிநீர் வசதி, மலசலகூடவசதிகள் வாழ்வாதார உதவிகள் போன்றவற்றை இலவசமாகச் செய்து உதவி நல்குவதைக் காணலாம்.

அரசின் சமூர்த்தி திட்டம் இவர்களது பொருளாதார நிலைமைக்கு ஓரளவு கைகொடுக்குமொன்றாக இருக்கின்றது. கல்விஅறிவு, சுகாதார வசதி என்பனவற்றைப்

பொருத்த வரையில் இப்பிரதேசங்கள் சிலவற்றில் குறிப்பாக பிராதான வீதியை மையப்படுத்தியதாக கிழக்குத் திசையை நோக்கிய கிராமங்களில் இவ்வசதிகள் மிகக் குறைவாக இருப்பதை நாம் அவதானிக்கலாம். முறுத்தானை, கோங்கானை போன்ற இடங்களில் இவ்வசதிகள் திருப்தியாக கிடைக்கவில்லை. இது தொடர்பாக இலங்கை அரச நிருவாகம் கவனம் செலுத்தவேண்டும்.

## உத்தியாக்கள் வழிபாடு

மட்டக்களப்பு பண்பாட்டோட்டத்தில், வேடவேளார் மத்தியில் நிலவும் உத்தியாக்கள் வழிபாடு வேடப்பரம்பரையின் ஊடாக வந்தது. இவை பூர்வீக வணக்கமுறையின் பண்பைக் கொண்டவை. இறந்தவர்களை, கோயில் வழிபாட்டில் (சடங்கில்) வழிபாடு செய்வது மட்டக்களப்பு பண்பாட்டோட்டத்தில் முக்கியமான விடயமாக அமைகின்றது. விளிம்பு நிலை மக்களின் வாழ்க்கை என்பது அவர்களது சடங்கோடும் பண்பாட்டோடும் பின்னிப்பிணைந்திருக்கும் என்பதற்கு உத்தியாக்கள் வழிபாடு சான்றாகின்றது.

உத்தியாக்கள் எனப்படுவோர் இறந்த தங்களது மூதாதைகள் ஆவர். இவர்கள் கப்புகர்களாகவும் இருந்திருப்பார்கள். குமார தெய்வச் சடங்கோடு தொடர்புபட்டவராகவும் இருந்திருப்பார்கள். இவர்கள் அவர்களது மொழியில்(பாசையில்) இவர்களை ‘‘செடிவாங்கிகள்’’ என கூறுவர். ஒவ்வொரு பரம்பரையிலும் முதலில் இறந்தவர் ‘‘தலையாய செயடிவாங்கி’’ எனவும் இவர்கள் ஒவ்வொருவரும் தங்களது தெய்வங்கள் எனவும் கருதுகின்றனர். இறந்தவர்களுக்கு தெய்வ உருக் கொடுப்பது இந்துப் பண்பாட்டில் இருப்பினும், கோயிலில் வைத்து அவர்களை வழிபாடு செய்யும் வழமை இல்லை. ஆனால் வேடர்வேளாளர் மத்தியில் வருகின்ற உத்தியாக்கள் எனப்படுபவர், கோயிலில் வைத்து பூசிக்கப்படுவதோடு தெய்வத்திற்கு சமமானவராக கருதப்படுபவர்களாகவே உள்ளனர்.

## உத்தியாக்களுக்கான சடங்குகளும் அதன் பண்பாட்டு அழகியலும் குணமாக்கல் செயற்பாடும்

உத்தியாக்களுக்கு உரிய வழிபாட்டு மரபு எனது ஆய்வில் இரு நிலைகளில் இனங்காணப்பட்டன. ஒன்று உத்தியாக்களை குமாரத்தெய்வவழிபாட்டில், இரண்டாம் நாள் சடங்கில் வரவழைத்து வழிபாடு செய்வது, மற்றையது தனியே தனது வீடுகளில் வைத்து வழிபாடு செய்வதாகும். இங்கு வீடு என்னும் போது வீட்டின் வளவில் ஒரு மூலையில் பந்தல் வைத்து வழிபடுவதாகும். இதனை விபரிப்பதாயின், ‘‘எனக்கும், பிறருக்கும் பிரச்சினை ஏற்படும் போதெல்லாம், அல்லது தனக்கு எதை செய்வது எதைசெய்யக் கூடாது என எண்ணும் போதெல்லாம், நோய் துன்பங்கள் வரும் போதெல்லாம், தான் தனது மூதாதையாகிய இறந்த உத்தியாக்கள் ஒருவரை வரவழைத்து அவரை மன்றாடி பிரச்சினைக்கானத் தீர்வை கூறக்கேட்டு அதன்படி செய்வேன் பிறருக்கும் அதை சொல்வேன்’’ என்பதாகும் (வண்டையா. கி முறுத்தானை) மேற்படி கூற்று இரண்டு வழிபாட்டு மரபு இருந்ததையே உறுதிசெய்கிறது.

இதனை தான் நான் களுவன்கேணி என்னும் இடத்தில் அவதானித்தேன். கொம்பர் சுப்பிரமணியம் வயது (67) இவர் வேட வழிவந்த சமூகத்தைச் சேர்ந்தவர். இவர் களுவன்கேணி என்னும் கிராமத்தில் தனியே உத்தியாக்களை வழிபடும் போக்கை மட்டும் வைத்திருக்கின்றார். இவர் குறிப்பிடும் போது எனக்கு ஒன்றும் தெரியாது நான் எனது மூதாதைகளான 'செடிவாங்கிகளை' (இறந்தவர்களை) அழைத்து அவர்களிடம் கேட்டே பக்தர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்கின்றேன். செடிவாங்கிகளான எனது மூதாதைகள் (உத்தியாக்கள்) என்னிடம் முற்பட்டு(தோன்றி) அதற்கான விளக்கத்தை தருகின்றனர் என்று கூறுகின்றார். இதில் அவர் செடிவாங்கிகளான மூதாதைகள் விரும்பி உண்ணும் உணவுப் பண்டங்களையும், குடிபானங்களையும் வைத்து பின்வரும் பாடலைப் பாடி (பாட்டு)

''இந்தா பெடியப்பா கமகமதோ இனியதே முறுத்தானை

சாராணி, பொடிசிங்க கப்புகா……… வா…… வா

சங்கடவே ……… சங்கடவே………. யாப்பானே யாப்பானே

இருநூறே வெல்லிச்சே வெல்லங்கிரியே வாடி வா….. வா''

கொட்டு (பாறை) அடிக்க அவர்கள் இவரிடம் வருதாகவும் அவர்களுக்கு மதிப்பளித்து அவர்களின் ஆசீர்வாதத்தில் வாழ்கின்றேன். எனக்கு வேடக்கலை தெய்வங்கள் உதவினாலும் அதனை என் மூதாதைகளே அவர்களிடம் இருந்து வாக்குதலைப் பெற்றுத் தருகின்றார்கள் என்று குறிப்பிடுகின்றனர். இவர்களது இந்த வழிபாட்டு முறை மூதாதையர்களுக்கு மதிப்பளிப்பதோடு மட்டக்களப்பில் இறந்தவர்களுக்கு கோயில் வைத்து வழிபடும் ஒரு புதிய வழிபாட்டு முறையை அறிமுகப்படுத்துவதாக இருக்கின்றது.

குமாரத் தெய்வச் சடங்கின் போது இரண்டாம் நாள் சடங்கில் உத்தியாக்கள் பிரசன்னமாகி வருவது இங்குகாணக்கூடியதாக உள்ளது. இது "உத்தியாக்கள் சடங்காக" நோக்கப்படுகின்றது. உத்தியாக்களுக்குரிய தாளம் கொட்டில் இசைக்கப்பட தலைமைக் கப்புகனார் மீது உத்தியாக்கள் முற்பட ( தோன்றத்) தொடங்குவர். பின்னர் ஏனைய கப்புகனார் உத்தியாக்களுக்குரிய பாடலைப் பாடுவர். பின் உத்தியாவாக முன்பாட்டு வில், அம்புடன் அபிநயித்து ஆடிவருவர். வில், அம்புடன் அபிநயித்து ஆடும் காட்சி பார்ப்பதற்கு நாடக தன்மையாக இருக்கும். இதில் ''சுவாரஸ்யம்'' என்னவென்றால் தாங்கள் யார் என்பதனை இரண்டாவது கப்புகனாரிடம் சொல்ல அவர் வரும் உத்தியாவின் உறவினருக்கு சொல்லுவார்.

அவ் உறவினர்கள் தங்கள் மூதாதைகளை அக்கப்புகநாரில் காண்பர். இவ்வேளை தனது மூதாதையானவர் விரும்பி உண்ணும் உணவு வகை, குடிபான வகைகள் என்பனவற்றை ஒரு பெட்டியில் வைத்து வெள்ளைச் சீலையால் மூடிக் கையில்

வைத்த வண்ணம் நிற்பர். உத்தியாவாக வரும் நபர், பந்தலின் முன் போடப்பட்டிருக்கும் உரலில் அமர்ந்து விடுவார். பின்னர் சட்டியில் இருக்கும் தண்ணீரை எடுத்து எறிந்து அவரது உறவினரைக் கூப்பிட்டு பக்கத்திலிருத்தி நலம் விசாரித்து அவர்களுடன் கதைத்து அவர்கள் பெட்டியில் வைத்திருக்கும் பொருட்களை முகர்ந்து பின் அந்த பெட்டியில் இருக்கும் பொருட்களை எடுத்து உண்டும், குடித்தும் அதை மற்றவர்களுக்கும் தனது உறவினர்களுக்கும் கொடுத்து பின் தனது வாரிசுகளை கட்டியணைத்து முகர்ந்து விட்டுச் செல்வர்.

இந்த வழிபாட்டு முறை மட்டக்களப்பின் ஏனைய சடங்கு முறைகளில் காணப்படாத வேட வெள்ளாளர்களிடம் மட்டும் காணப்படும் ஒரு முறையாகும். சடங்கில் உத்தியாக்கள் பிரசன்னமாகி ஆடினால்தான் ஏனைய தெய்வங்கள் ஒழுங்காக வரும் என்பது இவர்களது நம்பிக்கை. இந்தச் சடங்கில் குமார தெய்வத்தை வழிநடத்திய இவர்களது பழைய மூதாதைகள் அனைவரும் பிரசன்னமாவர். அவர்கள் பிரசன்னமாகி வந்து பேசும் பேச்சுக்களில் ஒன்றை இங்கு ஆய்வு காட்டி நிற்கின்றது.

| | | |
|---|---|---|
| உத்தியாவாகவருபவர் (பொடியப்பு கப்புகர்) | : | நான்தான் பொடியப்பு கப்புகர் வந்திருக்கன் |
| உறவினர் | : | அழுது கொண்டு நல்ல இருக்கிறயளா ஐயா சாமி! உங்களைப் பார்த்து எவ்வளவு நாளாகித்து. |
| பொடியப்பு கப்புகர் | : | ஆம், ஆம் என தலையாட்டியபடி குலதெய்வத்தோட நல்லா இருக்கன். |
| உறவினர் | : | இந்த குழந்தைச் (செடி) எமது குடும்பத்தில் பிறந்த ஒன்று (புதிதாக பிறந்த குழந்தையை காட்டுதல்) |
| பொடியப்பு கப்புகர் | : | வா, வா என்று குழந்தையை தூக்கி தண்ணீர் எறிந்து முகத்தைக் கழுவி திலகமிட்டு கொஞ்சி மகிழ்ந்து தாய் தகப்பனுக்கு குழந்தையை நல்லா பார்க்க வேண்டும் என்று புத்திமதி சொல்லுதல் தன் குலத்தொழிலை சொல்லிக் கொடுக்கவும் போதித்தல். |
| உறவினர் | : | உங்களுக்கு விருப்பமான கள்ளு, சுருட்டு, ரொட்டி, மோதகம் கொண்டு வந்திருக்கிறோம். |
| பொடியப்பு கப்புகர் | : | வாங்கி தண்ணீர் தெளித்து முகத்தல் முகர்ந்த பின் அவற்றை தானும் தன்னுடைய உறவுகளுமாக அனைவரும் உண்டு மகிழ்தல் |

இங்கு தனது இறந்த தனது பரம்பரையை நேரில்கண்ட சந்தோசத்தில் உறவினர்களாகிய பக்தர்களும், பூரிப்படைவதை அவதானிக்க கூடியதாக உள்ளது. உத்தியாவாக வருபவர் மாறி மாறி ஒவ்வொரு இறந்த மூதாதையும் உத்தியாவாக அபிநயத்து காட்டிச் செல்வதையும் காணலாம். இதில் சுவாரஸ்யம் என்னவெனில் தனது சந்ததியில் இறந்த உத்தியாவின் நடை, உடை, பாவனை அவருடைய பேச்சு என்பவற்றை செய்து காட்டுவதால் இங்கு போலச் செய்தல் பண்பு வெளிப்படுவதைக் காணலாம்.

**முடிவுரை:**

மட்டக்களப்பை பொறுத்தவரையில் இந்து மதத்தின் தாக்கம் கூடுதலாக இருக்கின்றது. இங்கு ஆகம முறை சார்ந்த வணக்க முறைகளும், ஆகம முறைசாராத சிறு தெய்வ வணக்க முறைகளும் காணப்படுகின்றன. இச் "சிறு தெய்வங்களுக்குச் செய்யும் வணக்க முறையை சடங்கு என்பர்."(ஆ.சிவசுப்ரமணியம், 2000 : 06)

இச்சிறு தெய்வங்களுள் வேட வழிவந்த வேடவேளாளர் எனப்படுகின்ற இனக்குழு சமூகத்தில் குமார தெய்வமும் அதன் பல கிளைத் தெய்வங்களும், கன்னிமாரும், உத்தியாக்களும் இடம் பெறுகின்ற போதும், இவ் ஆய்வு உத்தியாக்களின் வழிபாட்டு மரபை மாத்திரம் ஆராய்ந்துள்ளது.

தொகுப்பாக நோக்குகின்ற போது மட்டக்களப்பு பண்பாட்டோட்டத்தில் வேடவேளாளர் மத்தியில் நிலவும் உத்தியாக்கள் வழிபாடு வேடப்பரம்பரையின் ஊடாக வந்தது. இவை ஆதிகால வணக்கமுறையின் பண்பைக் கொண்டவை. இறந்தவர்களை கோயில் வழிபாட்டில் (சடங்கில்) வழிபாடு செய்வது மட்டக்களப்பு பண்பாட்டோட்டத்தில் முக்கியமான விடயமாகும்.

வேடவேளார் பல தெய்வங்களை வழிபாடு செய்கின்றார்கள். ஒவ்வொரு தெய்வங்களும் தனித்தனியே ஆய்வு செய்யப்படும் பொழுது மட்டக்களப்பு பண்பாட்டில் இன்னும் பல தெய்வங்களும், அதன் வணக்க முறைகளும் வெளித்தெரியும்.

உத்தியாக்கள் வழிபாட்டை பொறுத்தவரை இறந்த தனது மூதாதையை தெய்வ வடிவம் கொடுத்து கோயிலில் வழிபாடு செய்வது புதுமையானது. அவர்கள் தங்களது இறந்த மூதாதையை ஆண்டுக்கொருமுறை கோயில் சடங்கில், கோயில் வெளியில் காண்பதும், அவர்களோடு உரையாடுவதும், அவர்களோடு உண்டு மகிழ்வதும் இங்கு காணக்கூடியதாக இருக்கின்றது. இத்தகைய செயற்பாடு மனித உள ஆற்றுப்படுத்தலோடு தொடர்புடையது என்பதும் வேடவேளாளராக இனங்காணப்பட்ட பூர்வீக மனிதன் காடுகளில் வாழ்ந்து தனது பண்பாட்டை நிலைநிறுத்தி, பண்பாட்டு கட்டமைப்பைப் பேணி, பண்பாட்டு வெளி ஒன்றினை உருவாக்கி, அதில் முழுமையான ஒரு பண்பாட்டு அழகியல் வெளியொன்றின் ஊடாக மனிதக்குணமாக்கல் செயற்பாட்டை இறந்த மூதாதைகளை போற்றுவதன் ஊடாக செய்விப்பது இச்சடங்கின்

முக்கிய சமூக பண்பாட்டு செயற்பாடாகவும், இனவரைவியல் செயற்பாடாகவும் உள்ளது என்பதும் வெளிகொணரப்பட்டுள்ளது.

ஓர் இனத்தின் இனத்துவ அடையாளங்களை வெளிப்படுத்தத்தக்க அணைத்து பண்பு சார் நெறிமுறைகளும் இச் சடங்கில் இடம்பெறுகின்றன. குழுமமாக வாழுதல், தமது பூர்வீக பண்பாட்டை மீளளிக்கைச் செய்தல், ஒற்றுமை, மனஒருமைபாடு, தங்களது குலத்தொழிலை போலச் செய்து காட்டுதல், மூதாதைகளின் கண்காணிப்பில் தாங்கள் வளர்வதாக எண்ணி மனநிறைவு பெறுதல், குலத்தொழிலை வளர்த்துச் செல்லுதல் போன்ற பல்வேறு சமூகபண்பாட்டு அம்சங்களை வெளிபடுத்தும் சடங்காக இது அமைவதால், இது ஓர் இனத்தின் இனவரைவியல் சார் அணுகுமுறை என்பது இங்கு இனங்கண்டு கொள்ளப்பட்டுள்ளது.

இது மட்டக்களப்பின் பிதிர் வழிபாட்டோடு தொடர்புபடுகின்ற போதும் மட்டக்களப்பு பிதிர்வழிபாட்டு முறையில் இருந்து முற்றிலும் மாறுபட்ட ஒரு புதிய வழிபாடாக இருப்பது கவனிக்கத்தக்கது. இத்தகைய இனக் குழுமத்தினர் பற்றிய ஆய்வு இன்னும் பல சமூக மானிடவியல் ஆய்வுத்தேவையை சுட்டி நிற்கிறது

**உசாத்துணை நூல் பட்டியல்**


அழகப்பன். சு. தமிழ் நாடகம் தோற்றமும் வளர்ச்சியும், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1987

ENCYCLOPEDIA – Britanica University of Chicago lolum – 15.

கனகரெத்தினம். எஸ். ஒ. "Monograph of the Batticaloa District of the Eastern Provine", 1991

· சிவசுப்பிரமணியம். ஆ. "மந்திரம்" நாட்டார் வாழச்சாற்றியல், தொகுதி – 1, 1987.

சிவசுப்பிரமணியம். ஆ. மந்திரம் சடங்குகள், சென்னை, - 1990.

. சித்திரலேகா மௌனகுரு, மட்டக்களப்பு நாட்டார் வழக்காற்றியல் கரண அடிப்படைகளும், சமூக பொருளாதார முக்கியமும், இலங்கை தமிழ் நாட்டார் வழக்காற்றியல் பதிப்பு, கார்த்திகோசு, சிவத்தம்பி தமிழ்த்துறை வெளியீடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், - 1980.

சிவசண்முகம். ஞா. மட்டக்களப்பு குகன் குல முற்குகர் வரலாறும் மரபுகளும், விபுலம் வெளியீடு மட்டக்களப்பு, ஏப்பிரல் - 2000.

செல்வராஜகோபல். க. தா. யார் அந்த வேடர்கள், ஜீவா பதிப்பகம் தேத்தாதீவு.

. தாம்சன் ஜோர்ஜ், மனித சமூக சாரம், சென்னை, 1990.

நடராஜா. எப். எக்சி. சி. மட்டக்களப்பு மான்மிகம், மட்டக்களப்பு மாவட்ட கலாச்சார பேரவை மட்டக்களப்பு, நவம்பர் - 1998.

நடராஜா. எப். எக்சி. சி. மட்டக்களப்பு வரலாற்றைச் சுருக்கம், மட்டக்களப்பு மக்கள் வளமும் வாழ்க்கையும், தொகுப்பு எப். எக்சி. சி. நடராஜா மட்டக்களப்பு , 1980.

மௌனகுரு. சி. சடங்கிலிருந்து நாடகம் வரை, யாழ்ப்பாணம் - 1988.

மௌனகுரு. சி. நடிப்பு முறை பற்றிய எண்ணக்கருக்கள், சுவாமி விபுலானந்தா நினைவுப் பேருரை – 03, கிழக்குப் பல்கலைக்கழகம், - 1996.

மௌனகுரு. சி. மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள், விபுலம் வெளியீடு மட்டக்களப்பு, ஏப்ரல் - 1998.

**தகவல் வழங்கியோர் விபரம்**

01. அப்புகாமி, கானந்தன

02. உக்குவண்டன் கந்தையா, இலுக்குசேனை.

03. கந்தசாமி. சு. (கொட்டு வாசிப்பவர்), பாலையடித்தோணா, சந்திவெளி.

04. காத்தமுத்து. க. (கப்புகன்), முறுத்தானை.

05. காத்தமுத்து, தளவாய்.

06. கிட்ண பிள்ளை, களுவன்கேணி.

07. சின்னான். பெ. வந்தாறுமூலை.

08. சுப்பிரமணியம். கொ., களுவன்கேணி.

09. தம்பிப்பிள்ளை. க. (கொட்டு வாசிப்பவர்), களுவன்கேணி.

10. துரைச்சாமி. சு. (குமாரருக்கு ஆடுபவர்), குமாரர் ஆலய வீதி, கிரான்.

11. தெய்வநாயகம். சு. (குமாரர் கோயில் கப்புகன்), பாலையடித்தோணா, சந்திவெளி.

12. நாகன். வே. (கப்புகன்), பட்டியடிச்சேனை, கற்குடா, வாழைச்சேனை.

13. நாகப்பன். சி. சித்தாண்டி.

14. பால்குடியர். அ. களுவன்கேணி

15. ராசமணி. அ. (பெண்), களுவன்கேணி

16. வள்ளிப்பிள்ளை, கானந்தனை.

17 வண்டையா கி, (கப்புகன்) முறுத்தானை

18 வீமன். த. (கப்புகன்), முறுத்தானை.

19. மாரியர், களுவன்கேணி.